நாள்.31.10.2019

எஸ்டிசி.1/18

அ.சா. 8, ரமேஷ்பாபு (உதவி ஆய்வாளர்)

குறுக்கு விசாரணை

எனக்கும் சம்பவம் பற்றி 27.9.17ம்தேதி காலை 10.30மணிக்கு தேதி கிடைத்து. ஆனால் சம்பவம் நடந்தது 23.9.17ம்தேதிஇரவு 8.30 மணி என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை 27.9.17ம்தேதி அனுப்பி வைத்தேன். நீதிமன்றத்திற்கு 15.11.17ம்தேதிதான் வந்தது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை. சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையம் 10கி.மீ தொலைவில் உள்ளது. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 உறவுக்காரர்களா என்றால் இருக்கலாம். அ.சா.1 புகார் மற்றும் வாக்குமூலத்தில் அவரை எதிரிகள் எந்த ஆயுதத்தால் உடம்பின் எந்த பகுதியில் அடித்தார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். .23.9.17ம்தேதி இரவு 8.30மணிக்கு எதிரியை மணிமேகலையை எங்கள் காவல்நிலையத்தில் இந்த வழக்கின் வாதியின் கணவர் போதையில் எதிரி மணிமேகலை பாலியில் தொல்லை கொடுத்ததகாவும் பொது இடத்தில் அருவருப்பாக பேசி எங்கள் காவல்நிலைய கு.எண்.137/17 இதச பிரிவுகள். 294(பி), 324, 323, 354 உ/இ பிரிவு 4ன்படி பெண்கள் தொல்லை தடுப்புச்சட்டப்படி இதே நீதிமன்றத்தில் சிசி.31/18என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கிலிருந்து வாதி தப்பிக்கவேண்டி நடக்காத சம்பவத்தை நடந்த மாதிரி நான் 1,2,7 சாட்சிகளை சம்பவ இடம் செல்லாமல் பார்வை மகசர், யாரை விசாரிக்காமல் வழக்கை நிலுவையில் வைத்தேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் ஞாபகமில்லை. எதிரிகள் குற்றநிகழ்வில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. மருத்துவரிடம் 2 பேர் தாக்கியதாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். காலதாமதம் ஆகிவிட்டதால் 3ம் நபரை நாங்களாகவே இணைத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. அடித்ததாக சொல்லும குச்சி, கம்பு ஆகியவற்றை நான் கைப்பற்றவில்லை. சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

நாள்.31.10.2019
எஸ்டிசி.1/18
அ.சா. 5, மல்லிகா, க/பெ. சரவணக்குமார்
குறுக்கு விசாரணை

நான் எழுதாத 1 வெள்ளைதாளில் தான் கையெழுத்து செய்தேன். அதுவும் மணிமேகலையை தாக்கிய வழக்கில் கையெழுத்து செய்து கொடுத்தேன். வேறு எந்த வழக்குகளுக்கும் நான் கையெழுத்து போடவில்லை. சம்பவம் குறித்து தெரியாது. அந்த சமயம் நான் வீட்டில் இல்லை.

மறு விசாரணை இல்லை.